திராவிடன்

R.T. ARASU

ஆசிரியர்: என். வி. நடராசன்

டெல்லி செல்லுவேன்! நேருவுக்கு சொல்லுவேன்!

திராவிடன்

எதையுந் தாங்கும் இதயம் கொள்வோம்
எழிலார் திராவிடம் பெற்றிட உழைப்போம்

R.T.ARASU

மாலை 15 | 14—4—62 | மலர் 34

டெல்லி செல்லுவார் நேருவுக்கு சொல்லுவார்.

——[(*0*)]——

நமது மதிப்பிற்குரிய மாபெருந்தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்றத்தின் (மேல்சபை) உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு டெல்லி செல்லுகிருர்கள். இந்த நாள் கழக வரலாற்றில் மட்டுமல்லாது தென்னகத்தின் அரசியல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நாளாகும். பாராளுமன்ற(மேல்சபை)த்தில் அண்ணா அவர்கள் நம் தாயகத்தைச் சுரண்டி ஆதிக்கம் செலுத்துவோரிடம நியாயங்களை எடுத்துக்காட்டி, உரிமையை வலியுறுத்தி, திராவிடத் தனி அரசு காணும் பணியை மேற்கொண்டிருப்பது கண்டு நாம் பெருமைப் படுகிருேம்.

அந்தத் தலைவரின் குரல், தென்னகத்தின் ஏறத்தாழ பத்து கோடி மக்களின் எதிர்கால நல்வாழ்வை—உரிமையை—அவைகளைப் பெறுவதற்காக எடுத்துக்கொள்ளப்போகும் ஜனநாயக அடிப்படை நடவடிக்கைகளை வடநாட்டு ஆதிக்கத்திற்குச் சுட்டிக்காட்டி, அறிவுறுத்தும் நிறைவுபெற்ற பிரதிநிதித்துவம் கொண்ட குரலாகும். இன்னும் சொல்லப்போனுல் தென்ஞட்டிலுள்ள காங்கிரஸ்காரர்களின் தன்மானத்தைக் காக்கவும் சேர்த்து எழுப்பும் குரலாகும்.

ஏக இந்தியாதான் எங்களுக்கு இஷ்டதேவதை, இவர் யார் எங்களையும் சேர்த்துக் குரலெழுப்ப என்று கேட்கலாம் தாயகத்தின் தன்மானத்தை எண்ணிப்பார்க்கக்கூட மதி இல்லாது மங்கிப்போன ஏக இந்தியாக்கள்! அரசியல் நிலைமையை சரிவர உணர முடியாத அந்த அப்பாவிகளின் போக்கிற்காக கோபம் அல்ல—பரிதாபப்படுவோம்.

பாக்கிஸ்தான் பிரிவினையின்போது, காங்கிரஸ் தலைவர்கள் கேலி பேசினுர்கள். மவுலானு அசாத். டாக்டர் அன்சாரி போனற முஸ்லீம் தலைவர்கள் காங்கிரசிலிருக்க, இந்த ஜின்ஞ ஏதோ முஸ்லீம் சமுதாயத்திற்கே பிரதிநிதிபோல பேசுகிருரேயென்று! அதற்கு ஜனுப் ஜின்ஞ அளித்த பதில் இன்னும் நம் காதுகளிலே ஒலித்துக்கொண்டுதானிருக்கின்றது. "காங்கிரசிலுள்ள மவுலானு அசாத், டாக்டர் அன்சாரி ஆகியோர் மட்டுமல்ல மற்றுமுள்ள லட்சக்கணக்கான முஸ்லீம் மக்களுக்கும் சேர்த்துத்தான் நான் உரிமைக் குரலெழுப்புகிறேன் என்று ஜனுப் ஜின்ஞ அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்தார்கள்.

ஏக இந்தியாவை சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து போற்றிப் புகழும் அரசியல் அப்பாவிகளுக்கு ஜனுப் ஜின்ஞ தந்த பதிலையே நினைவூட்ட விரும்புகிருேம்.

தி. மு. கழகம் ஒரு சாதாரண அரசியல் கட்சியல்ல, அது ஒரு மகத்தான இயக்கம். ஏகாதிபத்திய பிடிப்பிலிருந்து நம் தாயகத்தை மீட்கும் பணியை மேற்கொண்டுள்ள இந்த மாபெரும் இயக்கத்தை ஒழுங்கான முறையில் வளர்க்க அறிஞர் அண்ணா அவர்கள் எடுத்துக்கொண்ட சீரிய முயற்சியையும் அம்முயற்சியில் ஈடுபட்டபோது ஏற்பட்ட பெருந்தடைகள்—பொல்லாப்புகள், வீண்பழிகள் ஆகியவைகளை மிக எளிதாகக் கடந்த அருமை அண்ணா அவர்களின் அரசியல் விவேகத்தையும், தூய்மையையும் எடுத்துக் கூறுவதென்ருல் அது ஒரு அரசியல் களஞ்சியமாக உருவாகும்.

என் செய்வது அண்ணா அவர்கள் ஒரு ஏழைக் குடியில் பிறந்தார்கள். ஆதலினுலே 'அரசியல் கர்த்தாக்கள்' என்று கூறிக்கொள்ளும் கூடாரத்தினரின் பாராட்டு விளம்பரம் ஆகியவைகள் அறவே தரப்படாமலிருக்கலாம். என்ருலும் அரசியலை உருவாக்குபவர்கள், நாட்டின் உயிர்நாடிகள் என்ற மகத்தான சக்தியின் பிரதிபிம்பமாக விளங்கும் ஏழை—நடுத்தர மக்களின் உள்ளங்களிலே அறிஞர் அண்ணாவும் அவரது அழிக்கமுடியாத இலட்சியமும் இடம் பெற்றிருப்பதை மறுப்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் தாங்கள் உயிர் வாழ்வதையே மறுப்பவர்களாக ஆவார்கள். எனவே திராவிட நாட்டுத் தனி உரிமைபற்றியோ—அல்லது தமிழ்நாட்டின் தனி உரிமைக்காகவோ குரலெழுப்ப இந்த அண்ணா யார் என்று கேலி பேசுபவர்களைப்பற்றி நாம் பொருட்படுத்தவேண்டாம்.

திராவிடத் தனி உரிமைப் பிரச்சினையை உலக நாடுகள் சபைக்கு எங்களால் கொண்டுபோக முடியும் என்று சில ஆண்டுகளுக்கு முன் அறிஞர் அண்ணா அவர்கள் முழக்கமிட்டபோது அதையும் கேலி செய்தார்கள் சில பிரகஸ்பதிகள். இன்று பாராளுமன்ற உறுப்பினராகச் செல்லும் நமது அண்ணா அவர்களிடம் டெல்லியிலுள்ள பிற நாட்டுத் தூதுவர்களும், பத்திரிகைப் பிரதிநிதிகளும் அவ்வப்போது தொடர்புகொண்டு அறிந்துகொள்ளயிருக்கும் விரிவான விளக்கங்களிலிருந்தும், சந்தர்ப்பம் நேரும்போது பாராளுமன்றத்தில் அறிஞர் அண்ணா அவர்களும் மற்றுமுள்ள கழகத் தோழர்களும் தென்னகத்தின் அவல நிலையைச் சுட்டிக்காட்டி எழுப்பயிருக்கும் உரிமை முழக்கங்களிலிருந்தும் உலகநாடுகள் அனைத்துக்கும் நம் கொள்கையை தெள்ளத்தெளிய அறிவதற்கு வாய்ப்பாக இருக்கப்போகிறது என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. இந்த உரிமை முழக்கம் சிறுகச் சிறுக உலகநாடுகளின் செவிகளில் ஏறினுல் எதிர்காலத்தில் சட்டமன்றம். பாராளுமன்றம் ஆகியவைகளில் மட்டுமல்லாமல் விடுதலை பெற்ற உலக நாடுகளிலுள்ள மக்கள் இதயங்களிலும் நம் உரிமைப் பிரச்சினைக்கு பேராதரவுக்கான மதிப்பைப் பெறுவோம். அதன்மூலம் உலக நாடுகள் அவையிலும் தென்னகத்தின் தனி உரிமைப் பிரச்சினைபற்றிய கேள்விகள் எழுப்பப்படும் என்பது உறுதி.

தி. மு. கழகத்தைப்பற்றி ஆளும் வர்க்கம் இதுவரை கணித்து வந்த ஒவ்வொரு கணக்கும் பொய்த்துப்போய் அது வளர்ந்துவரும் மாபெரும் சக்தியென்பதை எப்படி இன்றைய டெல்லி மூலவர்களே உணரமுடிந்ததோ அதுபோலவே உலகநாடுகள் சபையும் திராவிடர்களின்—தமிழர்களின் நியாயமான உரிமையை மனப்பூர்வமாக உணர்ந்து அதற்கு ஆதரவு தரத்தான் போகிறது.

திராவிடத்தின் திருவிளக்கு, தமிழகத்தின் இணையற்ற செல்வம், நமது அண்ணா அவர்கள் டெல்லி செல்லுகிருர்கள். தென்னகத்தின் இன்றைய அவல நிலையையும், அந்நிலை ஒழிந்து மக்கள் பெறவேண்டிய உரிமையையும் இந்தியப் பேரரசுக்கு, பிரதமர் நேருவுக்கு அவ்வப்போது எடுத்து விளக்குவார்கள். நாம் மேற்கொண்டுள்ள இலட்சியம் எவ்வாறு படிப்படியாக உயர்ந்து இன்று மக்களின் மகத்தான இலட்சியமாக வளர்ந்திருக்கிறதோ அந்த இலட்சியத்தை—'திராவிடநாடு திராவிடருக்கே'—என்ற இதய கீதத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அறிஞர் அண்ணா அவர்கள் அயராது பாடுபடுவார்கள் வெற்றிபெறுவார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கையில்—மகிழ்ச்சியில் நாமெல்லாம் நமது கடமையை இன்னும் கட்டுக்கோப்போடு தோழமை உணர்வோடு ஆற்றுவோமாக!

இந்தச் சந்தர்ப்பதில் நமது கழகத் தோழர்களுக்குப் பணிவன்பான வேண்டுகோளை விடுக்க விரும்புகிருேம். கட்சியை வளர்க்கும் முறையில், பழகும் விதத்தில் மற்ற கட்சிகளுக்கும் கழகத்திற்கும் உள்ள ஒரே வேறுபாடு; நாம் கழக விதிமுறைகளுடன் குடும்ப பாசத்தையும் இணைத்துப் பொதுப்பணியாற்றி வருகிருேம். அந்த பாசத்தைப்பற்றி யார் எவ்வளவு கேலி பேசினுலும், அண்ணா அவர்கள் வளர்த்த அந்த சக்திதான் கழக வளர்ச்சிக்கு அஸ்திவாரமாய் அமைந்திருக்கிறதென்பதை அறிவும் — நன்றியும் உள்ளவர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். எதிரிகள் வேண்டுமானுல் கேலி பேசலாம். அவர்கள் எப்போதுதான் நம்மை வாழ்த்தினுர்கள்!

அவ்வித குடும்ப பாசத்தை—தோழமையைச் சீர்குலைய வைக்கும் இழிச்செயல்களில் ஈடுபடுவதையே தொழிலாக்கொண்டவர்களின் சூதுவாதுகளுக்கு நாம் இடமளிக்காமல் ஒருவரோடு ஒருவர் கலந்து பழகவும் பிரச்சினைகளை மனம்விட்டுப் பேசவும், தவறிருப்பின் திருத்திக்கொள்ளவும் ஆன தோழமை உணர்வுடன் நமது பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டுகிருேம்.

அந்தப்பணிதான், வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை நேருவுக்கு நேர் நின்று எடுத்துக்கூறி அவைகளைத் தகர்த்தெறிந்து சுதந்திரத் திராவிடத்தைக் காணும் மகத்தான பொறுப்பை மேற்கொண்டு டெல்லி செல்லும் அண்ணா அவர்களுக்கு நாம்செலுத்தும் மேலான மரியாதையும் வணக்கமும் நன்றியும் ஆகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிருேம்.

அதுபோன்றே பாராளுமன்றத்தில் கடமையாற்றச் செல்லும் மற்ற கழகத் தோழர்களுக்கும் நமது வணக்கத்தையும் மகிழ்ச்சியையும் மீண்டுமொருமுறை தெரிவித்துக்கொள்கிருேம்.

வாழ்க திராவிடம். வெல்க அண்ணாவின் அரும்பணி!

என். வி. நடராசன்

அன்பழகன் வெற்றி

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ. அவர்கள் சென்னை—செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்ட மேல் சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். இவரை எதிர்த்து போட்டியிட்டவர்களில் — காங்கிரசின் பக்கபலத்துடன் போட்டியிட்ட திரு. புருஷோத்தமன் தோல்வியுற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர் பெருமக்களின் உரிமைக்காக தி. மு. கழகம் நீண்டகாலமாக பாடுபட்டு வருவதை நாடறியும். அந்த அடிப்படையில் பேராசிரியர் அன்பழகன் அவர்களுக்கு ஆதரவளித்த ஆசிரியர் பெருமக்களையும் வெற்றிபெற்ற அருமைத்தோழர் அன்பழகன் அவர்களையும் மனமாரப் பாராட்டுகிருேம்.

'திராவிடன்' மே நாள் சிறப்பிதழ்

——(*)——

அழகிய முகப்பு! அருமையான எழுத்தோவியங்கள்!

அதிக பக்கங்கள். :-: விலை 25 காசு

28-4-62 அன்றே வெளிவரும்.

விவரங்களுக்கு :- நிர்வாகி : 'திராவிடன்' சென்னை-1.

அடிச்சுவடு தெரிகிறது! அடிமைத்தளை உடைபடும்!

[என். வி. என். சோமு பி. ஏ.]

——(0)——

1962 மார்ச் 19! —விடுதலைப் பாதையில் அணிவகுத்து நிற்கும் இலட்சியவீரர்களுக்கு ஒரு முக்கியமான நாள்!

உடல், பொருள், ஆவி அத்தனையும் தாயகத்துக்கே ஈந்து நாட்டின் மானங்காக்க அரும்பணி யாற்றிடும் விடுதலை வீரர்கள் மகிழ்ந்து கொண்டாடக்கூடிய புனித தினம்!

அடிமை விலங்கொடிக்க ஆண்டாண்டு காலமாய் அயராது போரிட்ட அல்ஜீரிய மக்களுக்கு களிப்புச் செய்தியை வழங்கிய நாள் அது!

அல்ஜீரிய மக்களின் விடுதலைப் பெரும் போர் வெற்றிகரமான திருப்புமுனையைச் சந்தித்த நன்னாள் அது!

விடுதலை வரலாற்றின் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டிய புகழுக்குரிய நாள் மார்ச் 19!

திராவிட மக்களைப் பொறுத்தவரை மார்ச் 19 அகமகிழ்வுக்குரிய நாள் மட்டுமல்ல!

அறைகூவல் விடுக்கப்பட்ட நாளும் ஆகும்!

மகிழ்ச்சிச் செய்தியை சுமந்து வந்த நாள் மட்டுமல்ல-'சன்னத்து' பெற்றவர்கள் திராவிடத்தின் வீரத்தை சவாலுக்கழைத்த தினமும் ஆகும்!

அல்ஜீரிய மக்கள் நடத்திய விடுதலைப் பெரும்போரின் வெற்றி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட சில மணி நேரங்களுக்குள்ளாகவே—திராவிடத்தின் விடுதலை வீரர்களை நோக்கி கோபக்குரல் கொடுத்திருக்கிருர் இந்தியாவின் "டிகால்!"

அடிமைத்தளை நொறுங்கிய செய்தி கிடைத்த சில பல மணி நேரங்களுக்குப் பின்னர், திராவிடத்தின் அடிமை விலங்கை இன்னும் இறுக்கிப் பூட்டுவேன் என்னும் இறுமாப்புக் குரல் கொடுத்திருக்கிருர் கோலோச்சும் நேரு பண்டிதர்!

வரலாற்றுப் பொன்னேட்டில் மார்ச் 19 இந்த இரண்டு செய்திகளையும் தாங்கி நிற்கும்!

விடுதலை வீரர்களின் அணிவகுப்புக்கு முன்னுல் தன்னுடைய அடக்குமுறைகள் பலிக்காமல் போய் உரிமை வழங்கத் தீர்மானித்த ஏகாதிபத்திய வாதியின் திருந்திய தன்மையையும்— தன் வாழ்நாளிலேயே அந்த அரிய சம்பவத்தைக் கண்டறிந்த பின்னரும் விடுதலை கேட்போரை விரைந்து அடக்குவேன் என்று கொக்கரிக்கும் பரிதாபத்திற்குரியவரின் தெளிவற்ற போக்கையும் எதிர்கால வரலாறு எழுத மறக்காது!

"ஒப்புக்கொள்ளவே முடியாத சில விஷயங்கள் இங்கேஇருக்கின்றன. தி.மு.கழகத்தினரின் திராவிட நாட்டுப் பிரிவினையும் அப்படித்தான். போர் என்ருல் நிச்சயம் போரேதான். ஆனுலும் அது நிச்சயம் ஒப்புக்கொள்ளப்பட முடியாதது."

—ஆதிக்கக் குரல் கொடுத்திருக்கிருர் ஆசியாவின் ஜோதி!

ஒப்புக்கொள்ள முடியாத பல விஷயங்களில் இது ஒன்று என்கிருர் நேரு!

ஆனுல் டிகால்—பிரெஞ்சு அதிபர்—அல்ஜீரிய விடுதலை வீரர்களை அடக்கி யாண்டவர்—ஒப்புக்கொள்ள முடியாததே அல்ஜீரிய விடுதலை ஒன்றுதான்—என்று நேரு பண்டிதரைவிடத் தெளிவாகச் சொன்னுர்!

"போர் என்ருல் போரேதான்" என்று பூச்சாண்டி காட்டுகிருர் இந்தியாவின் டிகால்!

ஆனுல் பிரெஞ்சு டிகால் ஏழு ஆண்டு காலம் பயங்கர போரையே நடத்திப் பார்த்துவிட்டார்!

> "பூட்டிய இருப்புக்கூட்டின் கதவு திறக்கப்பட்டது!
> சிறுத்தையே வெளியில்வா! உன்னை
> எலியென இகழ்ந்தவர் நடுங்கப்
> புலியென செயல் செயப் புறப்படுவெளியில்!
> இங்குன்னுட்டுக்கு இழிகழுதை ஆட்சியா?
> கைவிரித்து வந்த கயவர் நம்மிடையே
> பொய்விரித்து புலன் மறைத்து
> நமக்குள உரிமை தமக்கென்பாரெனில்
> வழிவழி வந்த உன் மறத்தனம் எங்கே?
> மொழிப்பற்றெங்கே? விழிப்புற்றெழுக!
>
> இந்த வீர காவியத்தை வெற்றிகரமாகப் பாடிமுடித்துள்ளனர் அல்ஜிரிய நாட்டு மக்கள்! பல்லாண்டு காலம் போராடிய அந்நாட்டு மக்களின் விடுதலை வரலாறு விடுதலை விரும்பிகளுக்கு ஒரு விளக்க நூலாகும்.

"போர் நடந்தாலும் திராவிட விடுதலையை ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்கிருர் இந்தியாவின் சர்வாதிகாரி!

ஏழரை ஆண்டு காலம் போர் நடத்திப் பார்த்த பின் பணிந்துவிட்டார் பிரெஞ்சு சர்வாதிகாரி!

இந்திய நாட்டின் சர்வாதிகாரிக்கு நாம் இனி வேறெந்த விளக்கங்களையும் கூற வேண்டியதில்லை. அல்ஜீரியனின் அடிச்சுவட்டைச் சுட்டிக் காட்ட விரும்புகிருேம்!

எவ்வளவோ கொடுமைகள்—ஏற்கவொண்ணு இன்னல்கள்!

விடுதலை கேட்ட வீரர்களுக்கு வெஞ்சிறை மட்டுமல்ல—விவரிக்க இயலாத கொடுமைகள் பலவும் பரிசாக அளிக்கப்பட்டன!

உலக வரலாற்றிலேயே அல்ஜிரிய மக்களைப்போல் தியாகம் செய்தவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்!

அவர்களைப்போல் உள்ள உறுதி குலையாமல் விடுதலைப் போர் நடத்தியவர்களை வேறு எங்கும் காண முடியாது!

ஆப்ரிக்கக் கண்டத்தின் ஒரு பகுதியான அல்ஜீரியா 85000 சதுரமைல்கள் பரப்பளவு கொண்டது. 100 இலட்சம் மக்கள் வாழ்கிருர்கள் அங்கே. இந்த 100 இலட்சம் பேரில் விடுதலைப் பயணத்தில் பலியானவர்களின் தொகை 10 இலட்சம். கைது ஆனவர்கள், தாயகத்தை விட்டு ஓடிப்போனவர்கள், நாடு கடத்தப்பட்டவர்களின் தொகை 22 இலட்சம் பேர்.

அல்ஜீரிய விடுதலைப் பெரும் போரை சமாளிப்பதற்காக பிரெஞ்சு இராணுவம் செலவழித்த தொகை 3000 கோடி ரூபாய்! அல்ஜீரிய மக்களை அடக்குவதற்காக பிரெஞ்சு இராணுவம் நாளொன்றுக்கு 50 இலட்சம் ரூபாய்களை விழுங்கிற்று! இவற்ருலெல்லாம் அல்ஜீரிய மக்களின் விடுதலை ஆர்வம் தணியவில்லை—தளரவில்லை—மங்கவில்லை—மாறவும் இல்லை!

அல்ஜீரியா- முதன் முதலில் சுதந்திரமாக இருந்த நாடுதான். எதிர்பாராத விதமாக பிரெஞ்சுக்காரர்கள் வசம் அது சிக்கியது! பின்னர் பிரான்சு நாட்டின் காலனி நாடாக அது மாற்றப்பட்டு அலைக்கழிக்கப்பட்டு வந்தது.

என்று பிரான்சு நாட்டின் அடிமை நாடாக அது மாற்றப்பட்டதோ அன்றே அல்ஜீரிய மக்களின் தணியாத விடுதலை ஆர்வம் கொழுந்து விட்டெரிய ஆரம்பித்தது.

துவக்கத்தில் அல்ஜீரிய மக்கள் அமைதியாகவே தங்களது விடுதலை முழக்கத்தை எழுப்பினர். ஆனுல் அமைதியான வேண்டுகோளுக்குச் செவிமடுக்கும். அரசியல் நாகரீகம் ஆதிக்கபுரியினருக்கு அவ்வளவாக இருப்பதில்லை என்ற உலகநியதிக்கேற்ப பிரெஞ்சு ஏகாதிபத்தியமும். அல்ஜிரிய விடுதலை இயக்கத்தினரை தீவிரத் தன்மைக்குத் துரத்தியது.

1956ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் "ஒன்பதின்மர் குழு" பிரெஞ்சு ஆதிக்கத்தை எதிர்த்து சுதந்திரப்போர் துவக்கியது! 1958 செப்டம்பர் திங்களில் அல்ஜீரிய மக்கள் தங்களது சொந்த ஆட்சி ஒன்றை அல்ஜீரியாவில் நிறுவினவர். விடுதலைப்போரின் தலைவர்களில் ஒருவராக இருந்த அப்பாஸ் ஆற்றிய பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் சுற்றி அல்ஜீரிய போட்டி சர்க்காருக்கு ஆதரவு தேடினுர். 31 நாடுகள் அல்ஜீரிய சர்க்காரை அங்கீகரித்துள்ளன.

பிறகு அல்ஜீரிய விடுதலைப் போரை நடத்திச் செல்வதில் மற்ற தலைவர்களுக்கும் அப்பாசுக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதனுல் அப்பாஸ் விலக நேரிட்டது. அந்த இடத்துக்கு பென்கெட்டா பதவிக்கு வந்தபின் அல்ஜீரியாவின் விடுதலை விடிவெள்ளி கண்ணுக்குத் தெரிய ஆரம்பித்தது. சமரசப் பேச்சுக்கள் முடிந்துவிட்டன. சீக்கிரமே அல்ஜீரியா சுதந்திர பூமியாக ஆகிவிடும்.

உலகில் வேறெந்த விடுதலை இயக்கத்தினரும் ஏற்க முடியாத தியாகத் தழும்புகளை அல்ஜீரியா விடுதலை வீரர்கள் ஏற்றுள்ளனர்.

1957ம் ஆண்டு ஒரு நாள்—கோடையின் கடுமையான வெப்பத்துக்குப் பிறகு மாலைப் பொழுதில் 250 அல்ஜீரிய மக்கள் பிரெஞ்சு இராணுவத்தால் சுற்றிச் சூழ்ந்துகொள்ளப்பட்டனர். அன்று இரவு முழுவதும் இரு தரப்பாருக்கும் சண்டை நடந்தது. விடியுந்தருவாயில் பிரெஞ்சு இராணுவத்தினரின் கை ஓங்குவது போல் தெரிந்தது. பிறகு அந்த விடுதலை வீரர்கள்—அடிமைகளாக ஆதிக்கக்காரர்களிடம்சிக்கிக்கொள்வதை விட உயிர் துறப்பதே தங்கள் கடமை என்று கருதி "அல்ஜிரியா வாழ்க" என்று முழங்கிக்கொண்டே உயிர் துறந்தனர்.

அல்ஜீரிய மக்களின் வீர உணர்ச்சிக்கு இதுமட்டுமல்ல—இதை விட சிறந்த எடுத்துக்காட்டுகளும் உள்ளன.

பென் ஹிடி என்பவர்—விடுதலைப் பெரும்படையின் முன்னேடிகளில் ஒருவர்—அவரது உயிர் ஆதிக்கக்காரர்களால் பறிக்கப்படுவதற்கு முன்னுல் அந்தக் கொடுமைக்கார

[6-ம் பக்கம் பார்க்க]

சுதந்திர திராவிடத்தை பெற்றே தீருவோம்!

•

22—3—62 மாலை 7-30 மணிக்கு வெற்றிவிழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. நெல்லை மாவட்ட செயலாளர் திரு. எம். எஸ். சிவசாமி அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு:—

அன்புள்ள தலைவர் அவர்களே! ஆர்வமிக்க வாலிபத் தோழர்களே! பெரியோர்களே, தாயகத்திலே தி. மு. கழகம் பெற்றுள்ள குறிப்பிடத்தக்க வெற்றியை பம்பாயிலுள்ள தோழர்கள் ஆங்காங்கே விழாவெடுத்து கொண்டாடி வருவதை கடந்த பத்து நாட்களாக கண்டு வருகிறேன். எனது வணிக வேலை தொடர்போடு வந்த நான் ஒரு நாளைக்கு ஒரு கூட்டம் என்ற வகையில் கலந்து கொள்வதில்

நேருவின் உருட்டல் மிரட்டல்களால் எங்கள் உறுதிப்பாட்டினை அசைக்க முடியாது!

இந்த பகுதியை பொறுத்த வரையில் இது இரண்டாவது கூட்டமாகும். நான பம்பாய் தி. மு. கழகத் தோழர்களின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்து வந்ததிலே இருந்து அவர்கள் கவனமெல்லாம் நமது பரிதாபத்திற்குரிய அப்பாவி கம்யூனிஸ்ட்டுகளின மேல் இருப்பதை காண பெரிதும் வருந்துகிறேன்.

வால் அறுபட்ட நரி ஊளையிடத்தான் செய்யும்.

உடன்பாடு தொகுதியை பொறுத்தவரையில் கூட அமையமுடியாத படி அமைந்துவிட்டதற்கும் காரணமே கம்யூனிஸ்ட்டுகள்தான். இன்று அவர்கள் சொந்த சக்தி என்ன என்பதை ஊரும் உலகும் தெரிந்து கொண்டதே என்பதற்காக கவலைப்படாமல் இருக்க முடியுமா? செல்வாக்கை-சிறப்பை இழந்து சீர்கெட்ட நிலையிலுள்ள பரிதாபத்திற்குரிய அப்பாவி கம்யூனிஸ்டுகள் எழுந்து நடமாட ஐந்தாண்டுகளாகும் என்ற நிலையிலுள்ளவர்கள் நம்மை பற்றி பேசுகிறார்களே என்பதற்காக, நமது தோழர்கள் யாரும் கொஞ்சமும் வருத்தப்படவேண்டாம் என விரும்பிக் கேட்டுக்கொள்வேன். பதில் கூறத்தக்க வகையில், இந்த ஜீவானந்தங்களும், "போலிட் பீரோ" இராமமூர்த்திகளுமில்லை.

இரண்டு நாட்களுக்கு முன் பாராளு மன்றத்திலே திராவிடநாடு பிரச்சினை பற்றியும், தி. மு. கழக வளர்ச்சி பற்றியும் பேசிய நேரு அவர்களுக்கு பதில் கூறத்தக்க அளவுக்கு இன்று நாம் வளர்ந்திருக்கிறோம். 1949-ம் ஆண்டு செப்டம்பர் 17-ல் துவக்கப்பட்ட தி. மு. கழகம், இந்த பதிமூன்று ஆண்டுகளிலேபெற்றுள்ளவளர்ச்சி சாதாரணமானதல்ல.

ஆளும்கட்சியினருடைய அக்கிரமங்களை நாம் எடுத்து சொன்ன நேரத்திலே, கேலியும், கிண்டலும், பேசிய காங்கிரசார், இன்று பண்டிதர் பாராளுமன்றத்திலே, போரே வந்தாலும், உள்நாட்டு போரே ஏற்பட்டாலும், தி. மு. க.வை அடக்கி, அதன் செல்வாக்கை குறைத்து; அதன் வளர்ச்சியை தடை செய்வேன் என பேசுவதை கண்டு என்ன கூறுவார்கள்?

உள்நாட்டுப் போரே வந்தாலும் திராவிடநாடு பிரிவினைக்கு ஒப்பமாட்டேன் எனப் பாராளுமன்றத்தில் கொக்கரிக்கும் நேருவுக்கும், அவர்தம் சீடகோடிகளுக்கும் சொல்லுவோம். இது எங்களுக்கு பழக்கப்பட்ட கூக்குரல்தான். நேருவின் ஆவேசப் பேச்சுகளுக்கு உள்ள அந்தஸ்து எங்களுக்கு மட்டும் என்ன, இந்த நாட்டில் உள்ள நல்ல அரசியல்வாதிகள் அனைவருக்குமே தெரிந்ததுதான். நேருவின் கடந்த கால அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டு கூறுவதானல் அது பொறுத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

1953-ம் ஆண்டு சென்னையோடு ஒப்பி இருந்த ஆந்திர மாநிலத்தை மொழி வழி பிரிக்க வேண்டும் என்று கிளர்ச்சி துவங்கியபோது இந்த தெலுங்கர்களின் கிளர்ச்சியை பற்றி எனக்கு தெரியும். உள்நாட்டு போரே ஏற்பட்டாலும் இதற்கு உடன்பட மாட்டேன என்று பாராளுமன்றத்திலே ஆர்ப்பரித்தார். பொட்டி சீராமுலு உண்ணு நோன்பிருந்து மாண்ட பின்னர் எழுச்சியுற்ற ஆந்திர வீர பெருமக்கள் கிளர்ந்தெழுந்து இரயில்வே தண்டவாளங்களை பெயர்த்து தபால் தந்திகளை சீர்குலைத்து, நவதானிய கிடங்குகளை கொளுத்தி ஆந்திர பகுதிகள் எங்கணும் ஆர்ப்பரித்தெழுந்த கிளர்ச்சியை கண்ட பின்னர்தான் நேரு ஆந்திரத்தைப் பிரித்து தர ஒப்புதல் அளிக்கிறேன் அசம்பாவிதம்வேண்டாம் என அடங்கி வந்ததை நாங்கள் என்ன அறியாதவர்களா?

இதே பம்பாய் மாநிலத்தை மாராட்டியம் எனவும், குசராத்தி எனவும், இரு மாநிலங்களாக பிரிக்க சம்யுக்த மராட்டிய சமீதி, மகா குசராத்சன் பரிசத் என்ற அமைப்புகளின் கீழ் கட்டுண்டு போராடிய நேரத்தில் கடும் கோபத்துடன் நேரு சொன்னர், 'என் உயிருள்ள அளவும்இதற்குஒப்பேன் வானமே இடிந்து விழுந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என ஆர்பரித்ததை என்னைவிட நீங்கள் நேரிலேயே கண்டவர்கள், நன்கறிவீர்கள்.

ஆண்டவனைவிட ஒருபடி நேருவுக்கு மதிப்பளித்த மராட்டியமும், குசராத்தும், மொழிவழி மாநிலத்துக்கு ஒப்புதல் தரேன் என்று சர்வாதிகார தோரணையில் இறுமாப்பு கலந்த பதிலளித்ததை கண்டு அதே நேருவுக்கு செருப்பு மாலை போட்டு மரியாதை செய்ததை என்னைவிட நன்கறிவீர்கள். இத்துணைக்கண்டத்து நிதியமைச்சர் மொராஜி தேசாய் பேசிய கூட்டத்திற்கு கட்டுப்கோப்பாக ஒருவர் கூட போகாமல் தங்கள் மொழிப் பற்றை காட்டியது நமது கவனத்திலிருந்து மறையவில்லையே?

நடைபெற்ற தேர்தலில் பெரும் பெரும் தலைவர்களை எல்லாம் தோற்கடித்து மொழி வழி அமைப்புக்கு உடன்பாடு தந்தவர்களுக்கு பெரும் வெற்றியை தேடித்தந்ததை கண்டு மராட்டியம், மயான அமைதியுடன், கிளர்ச்சியின் உச்சகட்டத்தை அடைந்ததை கண்டு இந்த கிளர்ச்சியை எந்த சக்தியாலும் அடக்க முடியாது என உணர்ந்த நேரு பணிந்துவந்து பம்பாய் பிரிவினைக்கு பக்கப்பாட்டு பாடி பிரிவுக்கு உடன்பட்டு மராட்டியம், குஜராத்து என பெயர் தாங்கிய இரு மொழிவழி மாநிலத்திற்கு இசைவு தந்ததை அதற்குள்ளாகவா நாம் மறந்துபோனோம்?

அசாம் மாநிலத்தில் நாகர்கள் முற்றிலும் வேறுபட்ட பண்பாட்டை பழக்கவழக்கத்தை கொண்டுள்ள பட்டியலில் தங்கள் பரம்பரியத்தை காப்பாற்றிக் கொள்ள பண்பாட்டை பேண எடுத்துக்கொண்ட முயற்சியை கண்டு நகையொலி எழுப்பி கேலி புரிந்தவர்தானே நேரு. உரத்த குரலில் உறுமி பேசினரே. நாகர்களாவது தனி நாடாவது என்ன காட்டுமிராண்டித்தனமான வாதமென்று. எனது பட்டாளத்தை ஏவிவிட்டு சுட்டுத் தள்ளுவேன். எனப் பேசினரே, இறுதியில் நாகாலாந்து' (Nagaland) என்ற தனி அதிகாரத்திற்குட்பட்ட ஏற்பாட்டிற்கு இணைந்ததை கண்டவர்கள் தானே நாம்.

1946ல் வட இந்தியாவில் இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடியதை கண்டோம். ஆயிரக்கணக்கான தாய்மார்களின் கற்பு அழிக்கப்பட்டதை கேட்டோம். தாய்வேறு பிள்ளை வேறு என பிரிக்கப்பட்டதை கேட்டோம். தலைகள் சீவி எறியப்பட்டதைக் கண்டோம். இந்துக்களோடு முஸ்லீம்கள் இணைந்து வாழ முடியாது என்ற

ஐந்தாண்டுத் திட்டங்களில் தென்னட்டுக்குச் செய்துள்ள துரோகத்தை மறுக்கமுடியுமா?

நிலையை எடுத்துக்காட்டி தனிநாடு கோரியபொழுது இது பித்துக்குளித்தனமான பேச்சு நடக்கவே நடக்காது எனக் கூறியவர் நேரு. முஸ்லீம்மளுக்கு உள்ள தொல்லைகளை ஏழு அம்ச திட்ட மூலம் சமர்ப்பித்த பொழுது முஸ்லீம் லீகுக்கு திட்டம் தர என்ன யோக்யதை இருக்கிறதென அரசியல் நுட்பம் தெரியாமல் பேசியவர் தானே இந்த நேரு என்டதை மறந்தா போனோம்?

ஏழு அம்மச திட்டம் கேலிக்குள்ளானபோது பதினறு அம்மச திட்டமும். பதினலு இருபத்தெட்டான நிலையிலும் அலட்சியப் படுத்தி பேசியவர்களோடு இருந்தவர்தானே இந்த நேரு. இருபதெட்டு அம்ச திட்டமென்ன. ஐம்பத்தாறு அம்ச திட்டமானலும் யார் கேட்பது என அலட்சியம் பேசப் பேச ஆவேசமுற்ற முஸ்லீம்களின் தனிநாடு கிளர்ச்சி வலுப்பெற்று பாகிஸ்தான இன்றேல் கபர்ஸ்தான் என்று கிளர்ந்தெழுந்து நாட்டில் குருதி ஆறு பெருக்கெடுத்தோடவும் கோடிக் கணக்கான சொத்துக்களுக்கு நட்டமேற்படவும் நாடெங்கணும் அகதிகளாகப் பல குடும்பங்கள் பெருகியதையும் கண்டு வேறு வழியின்றி பாக்கிஸ்தான் தன்னலேயே பிரிந்ததை பார்த்து பேச வழியின்றி இருந்தவர்தானே இந்த நேரு இவரின் வெத்து வேட்டுக்கும் உருட்டல் மிரட்டலுக்கும் உள்ள வலு என்ன என்பதை நாமென்ன தெரியாதவர்களா.

தென்னகம். திராவிடம் வடவர்களோடு எந்த வகையிலும் ஒட்டுறவு கொள்ளயில்லாத நிலையை எடுத்தியம்பி திராவிடம தனிநாடாக பிரியவேண்டும் என்று சட்டத்திற்கு கட்டுப்பட்டு நேரிய சீரிய வழியிலே பணியாற்றும் தி. மு. க. இன்று பாராளுமன்றத்திற்கு ஏழு உறுப்பினர்களையும் அனுப்பும் வாய்ப்பு பெற்றுள்ளதை கண்டு அடையும் மகிழ்ச்சி நேருவுக்கு கோபத்தையும் கொதிப்பையும்தானே உண்டாக்கும். அதனல் தான் பாராளுமன்றத்திலே உள்நாட்டுப் போரே ஏற்பட்டாலும் தி. மு. க. வின் கோரிக்கைக்கு ஒப்பேன் என மிரட்டி இருக்கிறர். நாங்கள் இந்த சலசலப்புக்கெல்லாம் அஞ்சமாட்டோம் என்பதை அவர் உணரவேண்டும்.

எப்படி அவசரமாகவும் ஆத்திரமாகவும் ஆர்ப்பரித்து பேசினலும் நேரு பாக்கிஸ்தான் பிரிவினைக்கு ஒப்புக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டதோ அதைப்போல ஆந்திரப் பிரிவினைக்கு உடன் பட்டாரோ அதுபோல மராட்டிய குசராத்திய பிரிவினைக்கு துணை நின்ருரோ அதைப்போல நாக நாட்டுக்கு எப்படி இசைந்தாரோ அதைபோல திராவிட பிரிவினைக்கும் ஒப்புக்கொண்டே தீருவார் (என குறிப்பிட்டதும் பலத்த கையொலி எழும்பியது) கடந்தகால அரசியல் அனுபவம் நமக்கு அந்த நம்பிக்கையைத்தான் தருகிறது.

1937ல் பர்மா பிரிந்ததை எப்படி தடுக்க முடியாமல் போனதோ 1947ல் பாக்கிஸ்தான் பிரிந்ததை எப்படி தடுக்க முடியாமல் போனதோ அதைப்போலத்தான் திராவிட நாட்டுப் பிரிவினையையும் எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூற விரும்புகிறேன்—

காங்கிரசும் பிறரும் எண்ணிக் கிடப்பதெல்லாம் மாமேதை மனிதருள் மாணிக்கம் நேரு ஆளுகிறர் இந்த சாதாரணமானவர்கள் ஆலையிலும் சாலையிலும் பணி புரிகின்றவர்கள் இரயில்வேக்களிலும் பிற தொழில் மனைகளிலும் பணி புரியும் தொழிலாளர்கள் அடங்கிய இந்த தி. மு. க. நாட்டுப் பிரிவினைக் கேட்கிறதே அது சரியல்ல நாடு பிரிந்தால் என்ன லாபம் கிடைக்கும் என்று இந்த துணைக்கண்ட ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரசார் ஏற்றிட்ட நாளிலிருந்து புரிந்து வரும் அட்டூழியங்களையும் அக்ரமங்களையும் ஓரவஞ்சனைகளையும், மாற்ருந்தாய் மனப் போக்கையும் கண்டு அறிந்து அனுபவித்து ஆர. அமர. ஆராய்ந்துதான் இந்த முடிவில் உறுதியாக இருக்கிறோம் என்பதை எல்லோரும் உணர வேண்டும்.

பம்பாயில் எம். எஸ். சிவசாமி முழக்கம்!

முதல் ஐந்தாண்டு திட்டத்தில் செலவழிக்கப்பட்ட மொத்த தொகை 2,200 கோடி ரூபாய். அதில் சென்னைக்கு கிடைத்தது 140 கோடிதான் 42 கோடி மக்கள் கொண்ட இந்த துணைக் கண்டத்தில் மக்கள் தொகை விகிதாசாரப்படி 10ல் 1 பங்கு நியாயமாக கிடைத்திருக்க வேண்டும். அப்படி பார்த்தால் 220 கோடி நமக்கு கிடைக்க வேண்டும். நியாயமாக நமக்குக் கிடைக்க வேண்டியதில் இருந்து குறைக்கப்பட்ட தொகை 10 கோடியோ, 20 கோடியோ அல்ல 80 கோடி என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். சரி சனியன் தொலையட்டும் என்று விட்டுவிட்டோம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகை 4800 கோடி ரூபாய். மக்கள் விகிதாசாரப்படி நமக்கு கிடைத்திருக்க வேண்டியது — 480 கோடி ஆனால் செலவானது 170 கோடி மட்டும்தான். நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியது நாம் பெற உரிமைப் பெற்றது நமது வரி பணங்களிலிருந்தும் நலன் கருதியும் தீட்டப்பட்ட திட்டத்தில் நமக்குரிய பங்கில் 310 கோடியை ஏமாற்றி வஞ்சித்துள்ளனர் என்றால் இது சரியா? நியாயமா? நேர்மையா? நடு நிலைமையோடு கூற அன்போடு கேட்க கடமைப்பட்டவனாவேன். கிடைக்கவேண்டியது 480 கோடி. கிடைத்தது 170 கோடி ஏமாற்றப் பட்டது 310 கோடி.

இப்படி நம்மை தொடர்ந்து ஏமாற்றி வருவதையும், வஞ்சிக்கப் படுவதையும் கண்டுதான் உங்கள் ஆட்சியில் உதாசீனப்படுத்தப் பட்

பெற்றவர்கள், தமிழகம் மீது பற்று கொண்டவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். நமக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய 1020 கோடி எங்கே? ஒதுக்கப்பட்டுள்ள 290 கோடி எங்கே? தட்டிக் கேட்கும் தைரியம் இல்லாமல் தமிழக அமைச்சர்கள் இருப்பதால்தானே 730 கோடிக்கு நாமம் போட்டு இருக்கிறார்கள். இதைத்தான் தி.மு. கழகம் கேட்கிறது. ஓரவஞ்சனையுடையவர்கள் வடக்கே ஆட்சி புரிகிறார்கள் என்பதை.

தூத்துக்குடி துறைமுகத்தை ஆழ்கடல் துறைமுகமாக்கி சீர்படுத்தவேண்டும் என மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, வணிகக்கழகங்கள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. 57 ஆண்டு கால கோரிக்கை இரண்டாவது திட்டத்திலேயும் கவனிக்கப்படவில்லை. சர்வதேச வங்கியிலிருந்து துறைமுக அபிவிருத்திக்கு பெற்ற தொகையில் ஒதுக்கப்பட்டது பம்பாய்க்கு 24 கோடி. கல்கத்தாவுக்கு 27 கோடி. கல்கத்தாவில் இருந்து 40 கல் தொலைவிலுள்ள ஆல்டாவுக்கு 7 கோடி. குஜராத்திலுள்ள கண்டாலுக்கு முன்னரே செலவு செய்து 30 கோடி போக மேலும் 14 கோடி. ஆனால் துறைமுகங்களிலேயே 3-வது தகுதி பெற்ற தூத்துக்குடிக்கு ஐந்தே ஐந்து கோடிதான். 4-வது தகுதி பெற்ற கொச்சின் பெறுவது இரண்டே இரண்டு கோடிதான். இது ஓரவஞ்சனை இல்லையா? நியாய புத்தி படைத்தவர்கள் நிதானமாக சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எந்தக் காலத்திலும் ஏற்றுமதி, இறக்குமதி செய்ய வசதியுடைய

னால், தமிழகமோ, திராவிடமோ எவ்வித பயனையும் பெறப்போவதில்லை. இப்படி சூது-வாதுகளோடு திட்டமிடும் வடவர்தம் கொடுமையாட்சி அகலவும், நமது உரிமைகளைக் காப்பாற்றிக்கொள்ளவும், நமது நாடு நமக்காகவேண்டும் என்பதிலே என்ன தவறிருக்கிறது.

வடநாட்டிலுள்ள ஜாம்செட்பூர் ஆராய்ச்சியாளர்கள் சேலம் இரும்பு சக்தியுள்ளது — அதனை சீராக பயன்படுத்த வேண்டும் என பரிந்துரை செய்துள்ளனர். மைசூரிலே 250 கோடி இரும்பு தாதுப பொருட்களையும் நெய்வேலியிலுள்ள 200 கோடி நிலக்கரி கரும்பையும் வெளிக்கொணர முயற்சி எடுக்க வேண்டுமென தி. மு. கழகம் கோரினால் அமைச்சர்கள் கேலி மொழி பேசுகின்றனர். அமைச்சர் ஆர். வெங்கட்ராமன்

காங்கிரஸ் அமைச்சர்களில் ஒருவரான வெங்கட்ராமன் நமது கேள்விகளை கண்டு கேலி பேசுகிறார். நான் கேட்கிறேன். தென்னக தாது பொருட்களின் சிறப்பு 100 ஆண்டுகளுக்கு முன்னரே புகழ் பெற்றுள்ளது என்பது கனவுதானா? சேலம் இரும்பை எடுத்து வட ஆற்காட்டிலுள்ள பரங்கி பேட்டையில் உருக்கி இலண்டன் மாநகரிலுள்ள தேம்ஸ் நதி பாலத்தை அமைத்துள்ளார்கள் என்று நாங்கள் கூறினால் நையாண்டி செய்யவும், படிக்காத ஏடு இல்லை, தொடாத இடம் இல்லை என்று மேதாவிகள்போல் பேசும் அமைச்சரை கேட்பேன் ("The Wealth of indian Minerals") என்ற ஏடு சென்னை கன்னிமாரா படிப்பகத்தில் உள்ளது. ஆக்கிம்-வும்-என்ற இரு வெள்ளைக்காரர்கள் அந்நூலை எழுதி

தூத்துக்குடி துறைமுகம்-சேலம் இரும்பு சொல்லும் சோகக் கதைகளே போதுமே!

டோம், புறக்கணிக்கப்பட்டோம். வடக்கு வளரவே உங்கள் திட்டம் பயன்படுகிறது. எங்கள் நாடு எங்களுக்குள்ளாக வேண்டும் என்று கூறுகிறோம் இதில் என்ன தவறு காண்பீர்கள்? இப்படி நமது கோரிக்கைகளுக்கு செவிமடுக்காத கேளாக்காதினர்களிடம் தி. மு. கழக ஒப்பற்ற வழிகாட்டி எங்கள் பெருமைக்கும்பெருமதிப்பிற்குமுரிய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் தென்னகம் இரண்டு ஐந்தாண்டு திட்டங்களிலும் புறக்கணிக்கப்பட்டதை சுட்டிக் காட்டி, மூன்றாவது திட்டத்தில் 1000 கோடி ஒதுக்கவேண்டும், தனியார் துறை—அரசினர் துறை — ஆக இரண்டுமாக சேர்த்து 1000 கோடி ஒதுக்கவேண்டும் என்று கோரினார்கள். உடனே இங்குள்ள சில அப்பாவிகள்—பல்லைக்காட்டி, பதவி பெற்றவர்கள் புல்லுருவிகள் "அண்ணாதுரைக்கு என்ன அரசியல் தெரியும்" என்று கேட்டு வடக்குக்கு வால் பிடித்தார்கள்.

மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை 10,200 கோடி. அதில் மக்கள் விகிதாசாரப்படி நமக்கு நியாயமாக கிடைத்திருக்க வேண்டியது 1020 கோடி ரூபாய். நியாய புத்தி படைத்தவர்கள் தெளிவான அரசியல் ஞானம்

தாக தூத்துக்குடி துறைமுகத்தை ஆக்கவேண்டும் என்ற கோரிக்கை கவனிப்பாரற்று கிடக்கிறது. 44 கோடி செலவிட ஒப்புக்கொண்டுள்ள கண்டலாவில, ஏற்றுமதி, இறக்குமதி பெருகியுள்ளதா? என்றால் இல்லை. ஆனால், தூத்துக்குடியில் பெருக்கப்பட்டுள்ளது. அப்படி இருந்தும் கவனிக்காதது ஓரவஞ்சனையில்லையா? கண்டலாவை ப்ரீ போர்ட் (சுங்கவரி நீங்கிய துறைமுக) ஆக்க வடவர் சூழ்ச்சி செய்து வருகின்றனர். 'ப்ரீ போர்ட்' என்றால் இறக்குமதியாகும் பொருளுக்கு சுங்க வரி கிடையாது. துறைமுகத்தை சுற்றி 50-கல் அளவுக்கு சுங்க வரி கிடையாது. உதாரணமாக 200 ரூபாய் மதிப்புள்ள ஒரு ஒலிபெருக்கியை ஜெர்மனியிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும், இறக்குமதி செய்தால் இங்கு 120% சுங்க வரி கட்டி ஆக இங்கு அதனுடைய அசல் 450 ரூபாய் ஆகிவிடும். ப்ரீபோர்ட் என அறிவிக்கப்பட்டால் 200 ரூபாய்க்கு வாங்குகிற ஒலி பெருக்கியின் மதிப்பு இங்கேயும் அதே விலைதான் அசலாகும். கண்டலா ப்ரீ போர்ட் ஆனால், ஏற்கனவே கள்ள மார்கெட்டில் பேர்போன கூட்டம் ஆமதாபாத். பம்பாய் பகுதியிலே வியாபாரத்தை வளப்படுத்த — பெருக்க வாய்ப்பு ஏற்படும். அதி

தென்னக தேசீயத்தாரே! அமைச்சர் பதவிக்காக தாய்த்திருநாட்டைக் காட்டிக் கொடுக்காதீர்கள்!

பெரிய கற்றறிந்த மேதைபோல் இந்த தி.மு.க.வினர் அடுக்கு மொழி பேசுகின்றனர். தட்டினால் தங்கம், இடித்தால் இரும்பு என்றெல்லாம்பேசுகிறார்களே, சேலத்து இரும்பில் இலண்டனில் பாலம் அமைத்திருப்பதாக கூறுகிறார்களே நான் எத்தனையோ புத்தகங்களில் தேடியும் அதற்கான சான்றையே காணோமே. இதுவெல்லாம் இவர்களின் சொந்த சரக்கு எனப் பேசித் திரிகிறார்.

அவர் வேண்டுமானாலும் M.A.B L. படித்திருக்கலாம். ஆனால் இந்த நாடு எவ்வளவு பின் தங்கியுள்ளதென்பதை அவர் எண்ணிப்பார்க்க வேண்டும். கனரக தொழிற்சாலை தென்னகத்தில் அமைய வேண்டுமென நாங்கள் பேசாத நாளே கிடையாது. ஏற்கெனவே பிலாய். ரூர்கேலா, துர்காபூர் ஆகிய இடங்களில் இரும்பு உருக்காலைகள் உள்ளன. இப்பொழுது நாலாவது இரும்பு உருக்காலையும் வடக்கே பீகாரிலுள்ள புகோராவில் அமைக்க முடிவெடுத்து முயற்சிகளில் இறங்கியுள்ளனர். ரூர்கேலாவும் 131கோடியில், பிலாயும் 127 கோடியில், துர்காபூரும் வடக்கே இந்தியா ஸ்டீம்ரோல் மில் வடக்கே டாடாவிற்குரிய ஆலை ஜாம் செட்பூரிலே வடக்கே. இப்பொழுது நாலாவது ஐந்தாண்டு திட்டத்திலே அமைக்கப்படவிருக்கும் பொக்காரா உருக்காலையும் வடக்கே. தெற்கே புறக்கணிக்கப் படுகிறது என்றால் தினருவோரே. இதற்கென்ன பதில் சொல்வீர்கள்.

யுள்ளார்கள். இரும்பு என்ற தலைப்பில் 186-ம் பக்கத்தை பார்க்குமாறு அந்த பெரிய மனிதரை கேட்டுக்கொள்வேன்.

அடுக்கு மொழி என வீண் விதண்டாவிவாதமும், விசமத்தனமும் பேசும் அனைவரும் எண்ணிப் பார்க்கவேண்டும். 20 இலட்சம் மூலதனத்தில் தூத்துகுடியிலுள்ள நூற்பாலையில் ஆயிரம் தொழிலாளருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க முடிகிறதே. வடக்கே பொகராவில் 200 கோடி ரூபாயில் உருக்காலை அமையப் பெற்றால் அதன் மூலம் எத்தனை லட்சம் தொழிலாளருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அது போன்ற ஒரு தொழில்மனை தெற்கே துவங்கினால் பல லட்சம் தொழிலாளருக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமே ஆயிரம், ஆயிரத்து ஐந்நூறு மைல் கடந்து இங்குவந்து அவதியுறவேண்டிய நிலைமை ஏன்? ஆண்டொன்றுக்கு 84 கோடி வரிப் பணம் செலுத்துகிறோம். தோழர் எம். எஸ். சிவசாமி தொடர்ந்து பேசுகையில் வடக்கு தெற்கு வேறுபாடுகளையும், நடைபெறுகின்ற அட்டூழியங்களையும், ஆதரவற்ற கட்சித் தலைவர் ம. பொ. சி.யின் அறைக்கூவல்களையும் தெளிவுற எடுத்துக்காட்டி அரியதோர் உரையாற்றினார்கள்.

○

தொகுப்பு:

த. மு. பொற்கோ

நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளரும். மத்திய செயற்குழு உறுப்பினரும் கழகத் தலைவர்களில் ஒருவருமான தோழர் எம். எஸ். சிவசாமி அவர்கள் அண்மையில் பம்பாய்க்குச் சென்றிருந்த போது கழகக்கூட்டங்களில் ஆற்றிய சொற்பொழிவின் விளக்கம். பம்பாய்க்குச் செல்லும் கழகச் சொற்பொழிவாளர்களை நன்கு பயன்படுத்தி கழகக் கொள்கைகளை பம்பாய்ப் பகுதிகளில் பரப்பிவரும் சீரிய முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு வரும் பம்பாயிலுள்ள கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரையும் மனமாரப் பாராட்டுகிறோம்.

[ஆ-ர்]

நீலகிரி மாவட்ட தி. மா. மு. க.
முதல் மாநாடு

●

20 - 5 - 62 ஞாயிறு அன்று
குன்னூர் கலைமன்றத்தில் நடைபெறும்.

தலைவர்: தோப்பூர் திருவேங்கடம் பி. ஏ.

திறப்பாளர்: ச. ஏழிசைவல்லி (பி.ஏ)

தி. மா. மு. க. பொதுச்செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் பி.இ. அவர்களும், பொதுக்குழு உறுப்பினர்களும், மற்ற மாணவப் பேச்சாளர்களும் பங்கேற்பர்.

கலை நிகழ்ச்சி உண்டு.

———0———

— வரவேற்புக்குழு.

3-ம் பக்கத் தொடர்ச்சி.........

இராணுவ அதிகாரியைப் பார்த்துச் சொன்னார்:-''அதிகாரியே! நமக்கு—எனக்கும் உனக்கும்—சாவு என்பது அலட்சியமானது! ஆனால் நீ நிச்சயம் ஒருநாள் தோற்கடிக்கப் படுவாய், ஏனென்றால் உனக்கு எதிலுமே நம்பிக்கை கிடையாது. பிரெஞ்சுக்காரர்கள் அதிக நாள் பிரான்சை விரும்பமாட்டார்கள். உன்னுடையது இறந்த காலம்—உங்களுக்குள் கருத்து வேற்றுமை அதிகம்—உங்களுக்கு எது தேவை என்பதே தெரியாது!

ஆனால் எதிர்காலம் எங்களுடையது! அல்ஜீரியக் குடியரசில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. நான் இறந்துவிட்டாலும் ஆயிரக் கணக்கானவர்கள் என்னைப் பின்பற்றித் தாயகத்துக்காகப் போராட முன்வருவார்கள்...'' என்று சாகும் போதும் ஏகாதிபத்தியத்திற்கு இறுதி எச்சரிக்கை விடுத்துச் சென்ற பென்ஹிடி போன்ற விடுதலை வீரர்கள் அல்ஜீரியாவில் ஏராளம் !

பலவித கடுமையான சோதனைகளுக்கிடையே விடுதலை பெறப் போகும் அல்ஜீரியாவுக்கு — விடுதலைப்பெரும் பயணத்தில் ஈடுபட்டுள்ள சகோதரப் பாசறைக்கு—திராவிடத்து விடுதலை விரும்பிகள் தங்கள் இதயங்கனிந்த நல்வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

எவ்வெவ் வழிகளில் அல்ஜீரியா கட்டியாளப்பட்டதோ அவ்வவ் வழிகளில் திராவிடமும் இன்று அடக்கியாளப்படுகிறது.

ஏறத்தாழ அல்ஜீரியாவின் அடிமை வாழ்வுக்கும் திராவிடத்தின் அடிமை வாழ்வுக்கும் ஒற்றுமை நிரம்ப உண்டு.

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் அல்ஜீரியாவை எப்போதுமே தங்களது அடிமை நாடாக வைத்துக் கொண்டிருப்பதற்காகப் பலப்பல வழிகளைக் கையாண்டனர் — இங்கே வடவர்கள் கையாள்வதைப்போல !

அல்ஜீரியா எப்போதுமே சுதந்திரமாக இருந்ததில்லையே''-என்று கூறினர் பிரெஞ்சு ஆதிக்கபுரியினர்.

''திராவிடம் எப்போதும் தனியாக வாழ்ந்ததில்லையே'' என்று கூறுகின்றனர் வடபுலத்து ஆதிக்கக்காரர்கள்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தோடு அல்ஜீரியாவை இணைத்து வைக்க சிலர் அங்கே முயன்று பார்த்தார்கள்—இங்கே சிலர் வடநாட்டோடு தென்னாட்டை என்றுமே இணைத்துவைக்க முயற்சி செய்வதைப்போல்!

அல்ஜீரியாவை பல பேரரசுகள் ஆண்டிருக்கின்றன என்றாலும் அல்ஜிரியா அவைகளுக்கு அடிமையாகாதது மட்டுமல்ல அந்த மக்களின் ஆட்சியால் தன்னுடைய நாகரிகமும் பண்பாடும் அழியாமல் பாதுகாத்துக் கொண்டது—பற்பல ஆதிக்கக்காரர்களைச் சந்தித்திருந்தாலும் தனது நாகரிகமும் பண்பாடும் அழியாமல் பாதுகாத்துக் கொண்டதிராவிடத்தைப்போல் !

அல்சீரியாவில் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கக் கால்கள் வேரூன்றியதும், அல்சீரிய மக்கள் தங்கள் உணவுப் பொருள்களைப் பயிர் செய்வதற்கு வழியில்லாமல் தவிக்கையில் அல்சீரியர்கள் தங்களது கையிலும் தொடாத பிரெஞ்சு ஒயினை சாகுபடி செய்ய வற்புறுத்தப்பட்டனர்—இங்கே, திராவிடத்தில் அரிசி உணவிருக்க கோதுமை சாப்பிடும்படி வடவரால் வற்புறுத்தப்படுவதைப்போல்!

ஒரு அல்ஜீரியனின் சராசரி வருட வருமானம் 200 ரூபாய் என்றால் ஒரு ஐரோப்பியனின் வருமானம் 2400 ரூபாய் என்ற நிலையில் அல்சீரியனின் பொருளாதாரம் தாழ்த்தப்பட்டதைப்போன்று இங்கேயும் தென்னக மக்களின் சராசரி வருமானத்துக்கும் வடவரின் சராசரி வருமானத்துக்கும் பெருத்த வேறுபாடு இருந்து தென்னகப் பொருளாதாரம் தாழ்த்தப்பட்டிருக்கின்றது.

இதுபோல் பலவழிகளில் எப்படி பிரெஞ்சு ஏகாதிபத்தியம் அல்சீரியாவை அடக்கி யாண்டதோ அதேபோல் வடவர் ஏகாதிபத்தியம் திராவிடத்தை அடக்கியாள்கிறது!

திராவிடத்தை அடக்கி யாளத் துடித்திடும் நேரு பண்டிதர் உலக விவகாரம் தெரிந்தவர்! விடுதலை வரலாற்றின் பழைய ஏடுகளும் அவருக்குப் பழக்கம்—புதிய ஏடுகளையும் புரட்டியிருக்கிறார் !

அப்படிப்பட்ட விவகாரம்தெரிந்த ஒரு அரசியல்வாதி முசோலினியைப்போல் கொக்கரித்திருக்கிறார் !

அவருக்குத் தெளிவாகவே சொல்லிக் கொள்கிறது நாடு—அமைதி வழி சென்றுகொண்டிருந்த அல்ஜீரிய மக்களை ஆயுதந் தாங்கிகளாக மாற்றியது அந்நாட்டு ஆதிக்கக்காரர்களின் செய்கையேயாகும் !

இங்கே அறவழியில்—காந்திய நெறியில் தன்னாட்சி அமைத்திடத் துடித்திடும் தென்னவரிடம் போர்ப் பாஷையில் பேசுகிறார் பண்டிதர் நேரு. அவருக்கு அல்ஜீரியனின் அடிச்சுவட்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

அறவழியானாலும்—ஆயுதந்தாங்கிய வழியானாலும் இறுதி வெற்றி விடுதலை விரும்பிகளுக்குத்தான்!

ஆனால், இங்கே தென்னகத்தைப் பொருத்தவரை அரும்பெரும் தலைவர் அண்ணா அவர்களின் அமைதி வழியிலேயே திராவிடத்தை அடைந்திட இலட்சோப இலட்சம் வாலிபர்கள் அணிவகுத்து நிற்கிறார்கள் !

அவர்களெல்லாம் நாடு மீட்கப் பணியாற்றும் நல்லியக்கத் தூதுவர்கள்.

ஆதிக்கம் எந்த உருவில் வந்தாலும் அதனை எதிர்த்திடத் தயங்காதவர்கள் !

அவர்களைக் கோபக்கனலால் பொசுக்கிவிட நினைக்கும் பண்டிதர் பரம்பரைக்கு அல்ஜீரிய மக்களின் விடுதலைச் சூளுரையைக் காணிக்கையாக்குவோம் :—

> அல்ஜீரிய மக்களே! உங்கள் அடிமை வாழ்வின் இழிதன்மையைப் பற்றி சிந்தியுங்கள். அடிமை ஆட்சியில் நீதி, சமத்துவம் ஜனநாயகம் என்பதெல்லாம் நம்மீது வீசப்படும் வலை—மாயை! இவைகளை நம்பும்படி சிலர் உங்களுக்காக வாதாடுகிறார்கள்.
>
> நமக்குக் கிழக்கே டுனிஷியாவில் உள்ள நம் சகோதரர்களும், மேற்கே மொராக்காவில் உள்ள சகோதரர்களும் தத்தம் நாட்டைக் காகக்கப் பாடுபடுகின்றனர். உங்களது இரத்தத்தைச் சிந்தி நமது சுதந்திரத்தைத் திரும்பப் பெற உங்களை அழைக்கிறோம். விடுதலைக்குப்பாடுபடும் வீரர்களுக்குப் பாதுகாப்பும் புகலிடமும் உதவியும் அளியுங்கள். உரிமைப்போரில் எந்த பங்கும் ஏற்றுக்கொள்ளாமலிருப்பது குற்றம். அதை எதிர்ப்பது பெருந்துரோகம். வாழ்க விடுதலைப்படை! வாழ்க சுதந்திர அல்ஜீரியா !

—எத்தகைய உறுதி! எத்தகைய ஆர்வம்! அல்ஜீரிய மக்களின் இந்த இலட்சியப்பிணைப்பு—கொள்கைப்பற்று அவர்களுக்குப் பெரும் வெற்றியைத் தேடித்தந்துள்ளது !

உலகின் எந்த மூலையில் இருக்கும் ஆதிக்கக்காரர்களும் கற்றுத் தெளியவேண்டிய படிப்பினையாகும் அல்ஜீரிய மக்களின் அறைகூவல் !

இங்கே—திராவிடத்தில் நமது பெறற்கரிய பெருந்தலைவர்-அறிஞர் அண்ணா-அன்பழைப்பு விடுக்கிறார் நம்மை நோக்கி.

> ''சட்டசபையிலும் பாராளுமன்றத்திலும் இடம்பெற்று இலட்சிய முழக்கம் எழுப்பினால் போதாது. வாலிபரை வயோதிகராக்கிடும் இருட்டறை போன்றுள்ள சிறையில் அடைபட்ட நிலையில், கண்காணாத் தீவினில் கரை தெரியாக் கடலைப் பார்த்தபடி கைதியாக இருந்திடும் நிலையில்; தூக்குமேடையில் நின்றபடி, இந்த இலட்சியத்தை—திராவிடநாடு திராவிடருக்கே என்ற முழக்கத்தை எழுப்ப வல்லாயோ என்று பேரரசு நடாத்துவோர் கேட்டிடின், ஆம்! ஆம்! ஆருயிரைப் பலியிடவும் அஞ்சாது நிற்கிறோம்! தாயின் கரத்தில் பூட்டப்பட்டுள்ள தளைகள் பொடிபட, எமது உடல் ஆவியற்ற கூடாயினும் பரவாயில்லை. இன்னுயிரை எடுத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டிடும் நெஞ்சினராதல் வேண்டும்.''

இந்த அன்பழைப்புக்குப் பதில் சொல்ல ஆயிரமாயிரம் வீரர்கள் என்றோ அணிவகுத்து விட்டார்கள்!

ஆதிக்கக்காரர்களே புரிந்து கொள்ளுங்கள்! புதிய படிப்பினையைக் கற்றுக்கொள்ளுங்கள்!

அடிச்சுவடு தெரிகிறது!

அடிமைத்தளை உடைபடும்!

★

தமிழ் மக்களால் நன்மதிப்புப் பெற்ற
வெண்சங்கு
சீயக்காய்த் தூள்
எங்கும் கிடைக்கும்

●

மனத்தில் மிகுந்த
செல்வம் ராணி
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்



தயாரிப்பாளர் :
வெண்சங்கு சீயக்காய்த் தூள் பாக்டரி
3037—38 டபீர் குளம் ரோடு-தஞ்சை

2-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழக சட்ட மன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 50 பிரதிநிதிகட்கும், டெல்லிப் பாராளு மன்றத்திற்கு தெரிவு செய்யப் பட்டுள்ள 7 பிரதிநிதிகட்கும் இ. தி. மு. க. பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.''

......வெற்றிவிழாக் கூட்டத்தைப் பற்றி 'வீரகேசரி' வெளியிட்டுள்ள முழுச் செய்தியும் மேலே எடுத்துப் போட்டிருப்பதுதான். அந்தச் செய்தியிலே 'குழப்பம்' எங்கேயிருக்கிறது? அதன் இணையாசிரியர் தனது ஏட்டையும் கொழும்பிலிருக்கும் பிற ஏடுகளையும் நம்பாமல் தென்னகத்திலிருக்கும் கவிஞரின் தென்றலுக்கு 'திராவிட முஸ்லீம் கலகக் கூட்டம்' என்று வர்ணித்து கருத்துரை தந்ததின் மர்மம் இப்போது புரிகிறதல்லவா?

தி. மு. கழகத்தைப்பற்றி இங்கே சூடுபட எழுதிவரும் 'அப்பாவி'த் தென்றலிலே இதுபோலத் தடுமாறி எழுதினாலும்—தி. மு. க. வைப் பற்றிய காய்தல் இருப்பதால்—ஏற்று மிக மிக முக்கியத்துவம் தந்து வெளியிடுபவர்களென்றுதான் அவர் எழுதியிருக்கிறார். எனவே தான் இதழாசிரியரும், இணையாசிரியரும் கோயபல்ஸ் முயற்சியிலீடுபட்டுத் தோல்வி கண்டிருக்கின்றனர் இப்போது

வீரகேசரியில் செய்தி வந்ததோ 12-3-62ல். தென்றலில் கருத்துரை வந்ததோ 24-3-62ல் உண்மையின் ஒளி உதயமாகி ஒரு

அந்த நம்பிக்கைக்குப் பக்க பலமாக. வீரகேசரி 'டைரக்டர்' நமது அதிமணியிடமும், இ. தி. மு. க. அமைப்புச் செயலாளர் ஏ. எஸ். மணவைத்தம்பியிடமும் 'தென்றலில்' வீரகேசரி பெயரிட்டு கருத்துரை வெளியானது குறித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்கள். கம்பெனி சார்பாகவும், வீரகேசரி சார்பாகவும் மதிப்பிற்குரிய 'டைரக்டர் அவர்கள் மன்னிப்புக் கேட்டதோடு தென்றலுக்கும் இதுகுறித்து விளக்கியுள்ளார்கள்.

''கயமைத்தனத்துக்கு'' முக்கியத்துவம் தந்த தென்றல்...டைரக்டர் எழுதிய மடலுக்கு ஏனோ முக்கியத்துவம் தர மறந்துவிட்டது. உண்மை ஒருநாள்...மழைத்துளியும் தேனுகியதுபோல......வெளியாகிவிட்டதே என்ற வெட்கமா? அல்லது வீரகேசரி போல நாமும் மன்னிப்புக் கேட்கவேண்டுமே என்ற கலக்கமா?.........தவறைத் திருத்திக்கொள்வது பற்றி கவலையில்லாத மனிதர்கள் கவலைப்படாமலே யிருந்துவிடலாம். ஆனால், காலம் அப்படி இருந்துவிடுவதில்லை. கவலையில்லையென்று கண்களைச் சிலர் மூடிக்கொண்டாலும் அது மிகமிக விழிப்பாக கவனித்துக்கொண்டிருக்கும்.

இதை உணர்ந்துதான் தியவை எழுதி தென்றலுக்குத் தூதனுப்பியவர், செய்த பிழையெண்ணி, பொங்கிவந்த கடல் அலையை அடக்க நினைத்த பேதமையை எண்ணி நமது தோழர்களைக் காணும்போதெல்லாம் மனம் மிக வருந்தி மன்னிப்புக் கேட்டுவரு

கோயபல்ஸ் புத்தி வேண்டாம்!

கிழமைக்குப் பின்னர்தான் 'பொய்மை" பரப்ப முயற்சித்து; 'கயமைத்தனம்' என்றும் மகுடமிட்டு நமைச் சாடியிருக்கின்றனர். எது 'கயமைத்தனம்' என்பதை நேர்மையாளர்கள் சிந்திக்க கோருகிறோம். இலங்கையிலிருக்கும் பத்திரிகையில் பணியாற்றும் ஒரு பச்சோந்தியின் பச்சைப் புளுகினை நம்பி அப்படியே இங்குள்ள அதிமேதாவித்தனம் படைத்த கண்ணதாசனின் தென்றல் வெளியிடுகிற தென்றால் இதைவிட முறைகெட்ட நிலை பத்திரிகைத் துறையிலேயே இல்லை யென்பதை மிக மிக வேதனையோடு குறிப்பிடுகிறோம்.

நாம் குறிப்பிடும் 'பச்சோந்தி' எந்தப் பத்திரிகையில் பணியாற்றுகிறாரோ அதே பத்திரிகை நமது வெற்றி விழாவைப்பற்றி நேர்மையான முறையிலே சுவைபட வெளியிட்டிருந்தும், இதை நாடு முழுவதும் படித்த பிறகும்......இப்படி ஒரு கருத்துரை தீட்டி தென்றலில் வெளிவர வைத்ததைவிட கயமைத்தனம் வேறு இருக்க முடியுமா என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவலையோடு சிந்தித்து முடிவிற்கு வர வேண்டுகிறோம். பத்திரிகை பிரமாக்களென்று தங்களை கற்பனை செய்துகொண்டு தாங்கள் போட்டதே செய்தி, கொடுத்ததே தலைப்பு என்ற தலைவிரி கோலத்தோடு நடந்துகொள்ளும் 'தென்றல்' நிர்வாகத்தினரும் இனியாவது நிதானத்தோடு நடந்துகொள்ள முயற்சிப்பார்களென்று பெரிதும் நம்புகிறோம்.

கிறார். தோழர் மணவைத்தம்பி நமக்கு கடைசியாக எழுதியுள்ள கடிதத்தில் இது பற்றி அதிகம் எழுதியுள்ளார்

பச்சோந்தியின் பேனு கக்கிய விஷத்துளிகள்... அழிந்துகொண்டிருக்கின்றன. நேசக்கரம் இணைத்திருக்கும் முஸ்லீம் தோழர்களுக்கும் முன்னேற்றக் கழகத்தினருக்குமிடையே கொடுவாள் தூக்கிவந்த பேயன் குதிக்கால் பிடரியில்பட ஓடிக்கொண்டிருக்கிறன். நச்சுக் கோப்பை தாங்கி நமை நகைத்த தோழர் உண்மை நிலை கண்டு வெட்கித் தலைகுனிந்திருப்பதைக் காணுகிறோம். துரோக வரிகளை... வழிகளை... நம்பியோர் கேலிக்குரிய நிலையடைந்ததைத்தான் பார்த்து வருகிறோம்.

தவருன தகவல்களுக்கு ஜோடிப்புக்கொடுத்து கிழவியை மணையேற்ற முயற்சிப்பதுபோல் முயலுவோர் தொகை எந்தக் காலத்திலுமே குறையாமல்தானிருந்து வருகிறது. பச்சோந்தி தியாகராசர்களும், எதையுமே அச்சேற்ற முயலும் தென்றலாரும் நேர்மை நெஞ்சங்கொண்டு, உண்மையின் ஒளி கொண்டு சிந்தித்து செய்தி வெளியிட்டால், ஓலமிடும் நிலையும், பரிதாபத்திற்குரிய முறையிலே மன்னிப்புக் கேட்கும் போக்கும் வளர்ந்திடும் இழிநிலை இல்லா தொழியுமென்று பணிவோடு கூறுகிறோம்.

சிண்டு மூட்டுவது;

கலகம் விளைப்பது;

ஒன்றை நூறுக்குவது;

இன உணர்ச்சியைப் பாழாக்குவது;

நேசத்தைப் பாழடிப்பது

...ஆகிய 'கோயபல்ஸ்' முறைகள் நாட்டுக்குத் தேவையில்லாதது என்பது மட்டுமல்ல 'உண்மைக்குப் பிறகு' அவர்களுக்கு அவர்களே குழி வெட்டிக் கொள்ளும் முயற்சியாகவும் அமைவதை நெஞ்சிலே நஞ்சு தாங்கியோர் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மன்னிப்புக் கேட்டுவிடுவதோடு 'பிரச்சினை' தீர்ந்துவிடுவதில்லை. உள்ளத்திலே ஏற்படுத்தப்பட்ட புண் சுலபத்திலே ஆறிவிடுவதில்லை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டுகிறோம். சூடுபட எழுதுவோர், பேசுவோர் ஆயிரம் பொய்யை அவசர அவசரமாக அச்சேற்ற முயற்சிப்பதைவிட ஒரே ஒரு உண்மையை வெளியிட ஆர்வங்கொள்ளட்டும்.

தரக்குறைவாக எழுதுவதுதான் 'தத்துவமென்ருல்' நாம் குறுக்கே நிற்கப் போவதில்லை. நம்மிடம் பாவமன்னிப்புக் கேட்டவர்களைப் பார்த்து, 'சிலர் அழுவார், சிலர் சிரிப்பார்' என்று அவர்கள் பாடிச் சென்ருலும் நாம் கவலைப்படப் போவதில்லை. உண்மையின் காலடியில் என்ருவது ஒருநாள் இவர்கள் கண்ணீர் சிந்தி அழப்போகும் காரணத்தால்.

வாழ்க இலங்கை வாழ் திராவிடர்!

வாழ்க இ. தி. மு. கழகம்!

கண்ணதாசனுக்கு அறிவுறுத்தல்!

———0———

திரு. கண்ணதாசன் அவர்கள்
ஆசிரியர், 'தென்றல்'
சென்னை.

சென்ற 24—3—22 'தென்றல்' இதழில் கொழும்பு 'வீரகேசரி' துணையாசிரியர் திரு சு. தியாகராசன் என்னும் பேரால் 'இலங்கை தி. மு. க.வின் கயமைத்தனம்' என்ற தலைப்பில் எழுதப்பட்டு பிரசுரமாகி இருக்கும் கடிதம் முற்றிலும் பொய்யும் — புனைந்துரையும் கூடியதாய் அமைந்துள்ளன என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதுடன் என் மறுப்பையும் கண்டனத்தையும் இங்கே தெரிவிப்பதன் மூலம் உண்மையை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

'இலங்கை தி. மு. க.வை பயன்படுத்தி அதிமணி வயிறு வளர்க்கிருர்' என்ற கருத்துப்பட வரையப்பட்டுள்ள வார்த்தைகள் உண்மையில் என் சொந்த வாழ்க்கைக்கு களங்கம் கற்பிப்பதாய் அமைந்துள்ளன. வாய்ப்பும் வசதியும் உள்ள நான் கழகத்தைக் காட்டி யாரிடமும் கையேந்தி வாழ வேண்டிய இழிநிலையில் இல்லை எனபதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தென்னகத்தில் தி. மு. க. அடைந்த மகத்தான வெற்றியைக் கொண்டாட சென்ற 10-3-62-ம் நாள் இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொது மண்டபத்தில் நிகழ்ந்த இ. தி. மு. க.வின் பொதுக்கூட்டம் எவ்வித சலசலப்புமின்றி வெற்றியுடன் நடந்தேறியது. இச்செய்தியை உள்ளூர் பத்திரிகைகளெல்லாம் அதிலும் குறிப்பாக வீரகேசரி ஒழுங்காக வெளியிட்டுள்ளது. கூட்டத்தில் சலசலப்போ குழப்பமோ ஏற்பட்டிருந்தால் இச்செய்தியை உள்ளூர் பத்திரிகைகள் வெளியிடாதிருக்குமா? முற்றிலும் பொய்யான ஒரு செய்திக்கு மிக முக்கியம் கொடுத்து தங்கள் பத்திரிகையில் பிரசுரித்திருப்பதைக் குறித்து வியப்படைகிறோம்.

இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொது மண்டபத்தை கூட்டம் நடத்துவதற்காக நாங்களே கேட்டு ஒழுங்கு செய்துகொண்டோமே யொழிய திரு அஸீஸ் அவர்களின் தூண்டுதலின் பேரில் அல்ல. உண்மை ஒருபுறமிருக்க திரு அஸீசையும் பின்னிப் பிணைந்து இ. தி. மு. க. அமைப்பை அவமதித்து ஒரு ஆட்டக்காயாக ஆடக்கூடிய விதத்தில் எழுதியிருப்பது மிக, மிக பித்தலாட்டமாகும்.

சில காலத்திற்கு முன்னர் தாங்களும் இலங்கை வந்திருக்கிறீர்கள். இ. தி. மு. க. வைப்பற்றி ஓரளவுக்கேனும் தெரிந்து கொண்டிருப்பீர்கள். இருந்தும் இப்படி ஆதாரமற்ற பொய்ச் செய்திக்கு இடமளித்துவிட்டீர்களே என வருந்தாமலிருக்க முடியவில்லை.

கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற உயரிய இலட்சியத்துக்கு மாசு கற்பிக்கும் வகையில் இனியாவது இத்தகைய பொய்ச் செய்திகளை பிரசுரிக்காதிருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இரா அதிமணி
இலங்கை.

தெளிவு பெறுமா தென்றல்?

சூடுபிடித்தவர்களை நாம் பார்த்திருக்கிறோம் — பழகியிருக்கிறோம். அதிலும் குறிப்பாக எண்ணத்தை சூடுபட ஆக்கிக்கொண்டவர்கள், பழகுவதற்கு விசித்திரமானவர்கள். ஒன்றைச் சொல்வது, உடனே அதை மறுப்பது, மறுத்ததை எதிர்ப்பது, எதிர்த்ததை ஆதரிப்பது, ஆதரித்தும் ஆதரிக்காமலுமிருப்பது ஆகிய போக்குகளுக்கு ஆளாகிவிடும் மனப்போக்கு படைத்த அந்த விசித்திர பிறவிகள் சமுதாயத்தில் காட்சிக்குரியவர்களே!

இத்தகு திறத்தினர் எத்தகு சிறப்புப் பெற்றிருப்பினும் தலை இறக்கங்கண்டுவருவதே நாடறிந்த—நாமறிந்த உண்மையாகும். நமது பழைய நண்பரும், அச்சம் மடமையென்றும், அஞ்சாமை திராவிடர் உடமையென்றும் பாட்டெழுதியவரும், படமெடுத்து வாழ்பவரும், கவித்துவம் பெற்றவருமான கண்ணதாசப் பெரும்புலவர், தம்மிடமுள்ள...குளுமைதரும் 'தென்றல்' வீசும் எண்ணங்களைத் தந்தான பிறகு, சூடுபட......மாறுபட...சூதுபட எண்ணிடும், எழுதிடும் பாங்கினை அறியாதோர் சிலர்.

முன்னர் நாம் குறிப்பிட்டது போல, எத்துணை செல்வாக்கு வந்துற்ற போதிலும் சூடுதனை நெஞ்சத்திலே தேக்கியோர். வேடிக்கையின் பிரதிபிம்பமாக, புதுமை புரிக்கோர் வியப்புக் குறியாகவே இருந்திட இயலுமென்பதை இங்கே சற்று கூர்ந்து நோக்கிட வேண்டுகிறோம்.

கவிஞருக்காக தூது சொல்ல வந்த அந்தத் 'தென்றல்' 24-3-62 இதழில், சூடுபட, 'இலங்கைக் கடிதம்' என்ற பிரிவில், 'இலங்கை தி. மு. க.வின் கயமைத்தனம்' என்ற தலைப்பிட்டு—சொல்லவேண்டிய பொய்யையெல்லாம் ஒன்று திரட்டி—தியாகராசன் என்பவர் கைவண்ணம் காட்டியதாக வெளியிட்டுள்ளது! இந்தத் தியாகராசன் இலங்கை நாளிதழாம் 'வீரகேசரி'யின் இணையாசிரியரென்றும் தூது வந்த தென்றல் செப்பியது.

மண்டியிட்டுத் தவழ்ந்து வரும் மழலைச் செல்வத்தின் மார்பில் எட்டி உதைப்பதுபோல, ஈழத்திருநாட்டிலும் சிறுகைவிரித்து குறுநகை சிந்தி எழில் பரப்பும் தி. மு. கழகத்தைத் தோழர் தியாகராசன் சாடியிருக்கிறார். தோழரைப்பற்றி நமக்குக் கவலையில்லை. கழக நிலை கண்டு பகையுள்ளங்கொண்ட சிலரில் அவரும் ஒருவராக இருக்கக் கூடும். ஆனால், அவர் சார்ந்துள்ள 'வீரகேசரி' ஏடு பொறுப்புவாய்ந்ததாக இருப்பதால், இப்படிப்பட்ட கடை நிலை எண்ணங்கொண்டவர்களை நம்பி, கடல்கடந்து வெளியாகும் நாளிதழ் மோசம் போய் விடக் கூடாதென்பதற்காகவே தியாகராசனின் திருக்கோலத்தை

மா. தங்கவேலர்

வெளிச்சம் போட்டுக் காட்டத் துணிந்துள்ளோம்.

மேலும், கடவுளுக்கும் கவிஞனுக்கும் இப்போது தத்துவ ஒற்றுமை காணமுயலும் தென்றலாசிரியரும், அவரது பொன்னேட்டில் வெளியிட்ட புண்பட்ட கருத்தினை வரைந்தவர் எத்தகு சிறப்பினர், அந்தக் கருத்துரை உண்மையின் ஒளியருகே நிற்கும் தகுதிபடைத்ததுதானா என்பதைப் புரிந்து இனி வரும்நாட்களில் இதுபோன்ற கருத்துப்பிழைகளை—கயமைச் செயல்—என்ற சுடு மொழியால் மகுடமிடும் போக்கினை மாற்றிக்கொண்டு நல்லவர்களின் முன்னே தலைதூக்கி நிற்பதற்காகவும் அந்த ஈழத் தோழரின் கருத்துரைக்கு விளக்கம் தருகிறோம்.

..."கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற கொள்கையுடன் தி.மு.க. என்ற அமைப்பு தமிழ்நாட்டில் இயங்கி வந்தாலும், ஈழத்தில் அதன் கிளையை இயக்கி வருபவர்கள் அந்த முக்கொள்கைகளையும் தி. மு. க. என்ற மூன்று எழுத்துக்களையும்பிரித்தெடுத்து 'திரிகோண' வடிவில் புதைத்து வருகின்றனர்.

அதிமணி தி. மு. க; அந்தோனிமுத்து தி. மு. க, இளஞ்செழியன் தி.மு.க. என்று வகுத்துக்கொண்டு மக்களை ஏமாற்றி வருகின்றனர். தமிழகத்தை வடவர்கள் சுரண்டுகின்றனர் என்று தமிழக தி. மு. க. வினர் பிரசாரம் செய்யும் வேளையில், இலங்கையில் அவர்களின் தொண்டரடிப் பொடியார்கள் அப்பாவி மக்களான தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களைச் சுரண்டி வயிறு வளர்க்கின்றனர்.

இந்தத் திரிகோண இலட்சியவாதிகளில் முதல்வரும் மூத்தவருமான இரா. அதிமணியைத் தலைவராகக் கொண்ட கோஷ்டியினர், சென்ற 10-த் தேதி சனியன்று மாலை 6-மணிக்கு தேர்தல் வெற்றி விழா கொண்டாடினர்.

.........கூட்டத்தில் ஆள்சேர்க்க வேண்டுமென்பதற்காக இராமநாதபுரம் ஜில்லா முஸ்லீம்லீக் பிரதிநிதி ஜனாப் எம். கே. வி. மௌலானா வருவதாக அறிவித்திருந்தார்கள்.

......அவர் பேசுகையில் தான் இலங்கையிலிருப்பவரென்றும், ஆள்மாருட்டம் செய்து தம்மை அழைத்து வந்தனரென்றும் கூறினார்.

கூட்டத்தில் பேசியவர்கள் தேர்தல் வெற்றியை விட தமிழக தி. மு. க. தலைவர்களின் திறமையைப் பற்றியே நீட்டி முழக்கினர். பொதுச்செயலாளர் இரா. அதிமணி மிகவும் பொறுப்பு வாய்ந்த மனிதராக இருந்தும்கூட, தலைவருக்குரிய முறையில் தேர்தலை விமர்சனம் செய்யவில்லை.

'ஆள் மாருட்டம்' செய்யப்பட்ட முஸ்லீம் லீக் பேச்சாளர் பேசுகையில், "முஸ்லீம் லீக் வகுப்பு வாத ஸ்தாபனமல்ல அது பல்வேறு முன்னேற்றக் கொள்கைகளுடன் நாட்டுப் பிரிவினையையும் ஆக்கிக் கொண்டது. ஆனால், நாடு பிரிந்த பின்னர் தனது இதர இலட்சியங்களைத் தொடர்ந்து கடைப் பிடிக்கிறது. எமது லீக் வகுப்பு வாத ஸ்தாபனமெனறால் தி. மு. க இன வாத ஸ்தாபனமல்லவா?" என்று கேட்டார். உடனே கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது.

தி. மு. க. விலுள்ள தமிழர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடையில் தகராறு ஏற்பட்டது. சிறிது நேர வாய்ச்சண்டைக்குப் பின்பு கூட்டம் மீண்டும் ஆரம்பித்தது. என்றாலும், கூக்குரலும், சிறு சிறு குட்டிக் கூட்டங்களும் தொடர்ந்து இருந்தன. இறுதியில் பெரியவர்களும், நல்லவர்களுமான சிலர் தலையிட்டு அமைதி ஏற்படுத்தினர்.

.........குழப்பத்துடன் கூட்டம் முடிவடைந்தது. கூட்டத்திற்குப் பின்னரும் தெருவில் சிறு சிறு கூட்டங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் இது தி. மு. க. கூட்டமல்ல, திராவிட முஸ்லீம் கலகக் கூட்டம் என்று கூறிச் சென்றனர்."

—இதுதான் அந்தக் கருத்துரையின் குற்றச்சாட்டு! தி. மு. க. வின் வெற்றிவிழாக் கூட்டத்தை விமர்சிக்கும் முறையிலே தோழரின் பேனா விஷத்துளிகளைக் கக்கியிருக்கிறது. அதன் முக்கிய நோக்கம் முஸ்லீம் லீக்கிற்கும் — கழகத்திற்கும் இருந்து வரும் நேச பாவத்தை இது மாதிரியான சிண்டு மூட்டிவிடும் முறைகளால் சிதைத்துவிட முயற்சிப்பதாகும். வெற்றி விழாக் கூட்டம் குழப்பத்தில் முடிந்ததாகக் குறிப்பிட்டு, இது, தி. மு. க. கூட்டமல்ல திராவிட முஸ்லீம் கலகக்கூட்டம் என்றும் அந்தப் பேனா பிரகஸ்பதி வர்ணித்து முடித்திருக்கிறார்.

இந்தப்பேனா பிரகஸ்பதி, எழுதிக் காட்டும் கோணங்கி இணையாசிரியராக இருக்கும் 'வீரகேசரி' இந்த வெற்றிவிழாக் கூட்டத்தைப் பற்றி எழுதியுள்ளதைக் கீழே எடுத்துப் போட்டுள்ளோம். அதையும் படித்துப் பாருங்கள், இதோ செய்தி;—

இந்திய தேர்தலில் தி. மு. க. வின் அமோக வெற்றிக்குப் பாராட்டு!

இ. தி. மு. க.கூட்டத்தில் தீர்மானம்.

கொழும்பு, மார்ச். 12.

இ. தி. மு. கழகத்தின் சார்பில் 10ந் தேதியன்று, கொழும்பு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மண்டபத்தில் மு. வே. பெ. சாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இராமநாதபுரம் முஸ்லீம் லீக் சார்பாக ஜனாப் எம். கே. மௌலானா கலந்து கொண்டார். கூட்டத்தில் பொதுச் செயலாளர் இரா. அதிமணி பேசுகையில் தோட்டப் பகுதியிலே வாழுகின்ற இந்திய வம்சா வழியினரின் குடியுரிமைப் பிரச்னையில் ஒரு முடிவும் காணாது நெடு நாட்களாக விட்டு வைத்திருப்பது சரியல்ல என்று கூறினார். 'ஆண்ட பரம்பரையினர், சிதறுண்டு பல நாடுகளில் அவல வாழ்வு வாழுகின்ற தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த வெற்றி மகிழ்ச்சியைத் தருமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, அந்த மகிழ்ச்சியில் இலங்கைவாழ் தமிழராகிய நாமும் பங்கு கொண்டு அவர்களை வாழ்த்துகிறோம்.

அடுத்து திருவாளர்கள் பி. எம். ஜலால், பி. எம். சேகர், ஏ. எஸ். மணவைத்தம்பி ஆகியவர்களும் பேசினர். திரு மா. சே. அருள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தீர்மானம்:

கீழ்க்கண்ட தீர்மானம் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. அண்மையில் தமிழகத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் அமோக வெற்றியீட்டியமை குறித்து இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறது.

நாட்டின் முன்னேற்றத்திலும் விடுதலையிலும் ஆர்வங்கொண்டு, கழக வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த பொது மக்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவிக்கிறது.

[5-ம் பக்கம் பார்க்க]

பம்பாய் குறள்நெறிக் கழகம்
தாராவி-பம்பாய் 17.

துவக்க விழா

நாள்:
14-4-62 சனி மாலை 7 மணி

இடம்;
வாழைக்கட்டவாடி (தாராவி)

வரவேற்பாளர்;
இரா. மா. சண்முகராசன்

துவக்குபவர்:
ஆசிரியர் அப்புக்குட்டி

தலைவர்:
திரு. சு. வள்ளிநாயகம்

பேசுவோர்:
திரு: கோ. இராசன் எம்.ஏ.
„ எஸ்.ஏ.பத்மநாபன் பிஎஸ்சி
„ த. மு. பொற்கோ

திராவிடன் : மே நாள் சிறப்பிதழ் : விலை 25 காசு

அழகிய அமைப்பு. அதிக பக்கங்கள். பிரதிகளுக்கு உடனே எழுதுங்கள்

ஆசிரியர், வெளியிடுபவர்: என். வி. நடராசன், அச்சிடுபவர், சோழு அச்சகம், 168, வால்டாக்ஸ் ரோடு, சென்னை-1